# ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

# 9TH INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES

# உலகமயக் காலக்கட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல்

# NURTURING TAMIL STUDIES IN THE GLOBALIZED ERA

## (ஆய்வுச்சுருக்கம் / ABSTRACTS)


மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலும்பூர்

University of Malaya, Kuala Lumpur

2015

உலகமயக் காலக்கட்டத்தில் தமிழாய்வுக்கு வளம் சேர்த்தல்
**NURTURING TAMIL STUDIES IN THE GLOBALIZED ERA**

**(ஆய்வுச்சுருக்கம் /Abstracts)**

First Published, 2015

Editors:
Kanthasamy, N.
Kumaran, S.
Mohana Dass, R.

Published by :
International Association for Tamil Research (IATR)
Malaysia
c/o Department of Indian Studies
Faculty of Arts and Social Sciences
University of Malaya
50603 Kuala Lumpur

Printed by :
Thriumagal Publication
No. 69, Ground Floor, Jalan PJS 1/48,
Petaling Utama, Batu 7, Jalan Klang Lama,
46000 Petaling Jaya, Selangor, Malaysia.
Tel : 03 - 7781 9754
H/P : 016 - 972 1625
E-mail : thirumagal01@yahoo.com

# இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல்: தற்கால நடைமுறைகளும் சவால்களும்

Ananthamyl Nithlavarnan
anithlavarnan@gmail.com

இலங்கையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவ்வினங்களின் தனித்துவத்தைப் பேணிக்கொள்வதற்கும் கலாச்சாரப் பாதுகாப்பிற்கும், தமிழ்மொழி அழியாது பாதுகாக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும் உலகமயமாக்கல் மற்றும் மேற்கத்திய ஆதிக்கம் என்பவற்றினாலும், இலங்கையில் வரலாற்று ரீதியாக சிறுபான்மையினர், மொழிரீதியான பாகுபாடுகளிற்குட்பட்டு வருவதனாலும், தமிழ்மொழி அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. மேலும் இனமுரண்பாடு மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக கணிசமானளவு தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களின் இரண்டாம் தலைமுறையினர் தமிழ்மொழியை எழுத வாசிக்க இடர்படுகின்றனர். அவர்களுக்கான தமிழ் கற்பிக்கும் வழிமுறைகளைக் கண்டறியும் பொறுப்பும் அவர்களின் தாயகம் என்ற வகையில் இலங்கைக்கு உண்டு. இப்பின்னணியில் இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மீள்பார்வைக்குட்படுத்தி, மேம்படுத்தவேண்டிய தேவை அவசியமாகவுள்ளது. இவ்வாய்வானது தற்காலத்தில், இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகள், தமிழ்ப்பாடம் கற்பதில் மாணவர்களுக்குள்ள ஆர்வம், பொதுப்பரீட்சைகளில் மாணவர்களின் தமிழ்ப்பாட அடைவுகள், கற்றல் - கற்பித்தலில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் என்பவை தொடர்பாக ஆராய்கின்றது. அளவறி மற்றும் பண்பறிரீதியான ஆய்வுமுறையியல்கள் இரண்டும் கலந்து இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள, புள்ளிவிபரங்கள், கலைத்திட்ட ஆவணங்களின் பகுப்பாய்வு (பாட நூல்கள், பாடத்திட்டங்கள், ஆசிரியர், அறிவுரைப்பு வழிகாட்டிகள்) மற்றும் இலக்கியமீளாய்வுகளில் இருந்து பெறப்பட்டது. முதனிலைத்தரவுகள், தமிழ்ப்பாட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடல், வகுப்பறைத்தரிசிப்பு என்பவற்றின் மூலம் பெறப்பட்டது. இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் புராதன காலந்தொட்டு நடைபெற்று வருகின்றது. ஆதிகாலத்தில் குருகுலமுறை மூலம் தமிழ் கற்றல் - கற்பித்தல் இடம்பெற்றது. தற்காலத்தில் முறைசார் கல்வி நிறுவனங்களான முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இப்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் கற்றல் - கற்பித்தலில் கல்விக்கொள்கைகள், கலைத்திட்டம்,

மதிப்பீடு, கற்பித்தல் முறையியல், மற்றும் ஆசிரியர்; பயிற்சி சார்பான சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. இச்சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான முன்னெடுப்புக்களை, காலமாற்றத்திற்கேற்ப மேற்கொள்வதனூடாக செம்மொழியான தமிழ் மொழியை அழிவிலிருந்து பாதுகாக்கமுடியும்.

## சங்க இலக்கியத்தில் நாட்டியக் கூறுகள்

Anantha Jothi Darshanan
aananthy29@gmail.com

பாட்டும் தொகையுமாக அமையும் சங்க இலக்கியங்களில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க்கூறுகளும் சிறப்புற அமைந்துள்ளன. இவற்றில் ஒன்றான நாடகம் கூத்து என்ற பெயரில் பயிலப்பட்டுள்ளது. கூத்து, கூத்தர், கூத்தராற்றுப்படை என்கிற வழக்காறுகள் இவ்விலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. கூத்து ஆடல் என்று வழங்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகள், கூத்துக் கலைஞர்கள், கூத்து நிகழ்த்தப்பயன்படும் இசைக்கருவிகள், இசை முழக்கியல்கள், இக்கூத்துகளின் பிற்கால வளர்ச்சி நிலைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாடல், கலிநடம், உரற்கூத்து, பாவைக்கூத்து, கொடுகொட்டி, காபாலம், பாண்டரங்கக் கூத்து, உவகைக் கூத்து, வாடா வள்ளி, பொய்யாடல், பேய்நொடியாடல், போன்றன இடம்பெற்றுள்ளன. இவை ஆடிய களங்கள், காலங்கள், மாந்தர்கள், சூழல்கள், பங்கு பெற்ற இசைக்கருவிகள், ஆதரித்த புரவலர்கள், கூறிய புலவர்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன. இக்கூத்துக்கள் தொழில் முறைக்கூத்துக் கலைஞர்களாலும், பிறராலும் ஆடப்பட்டுள்ளன. பொழுது போக்கு, விழாக்காலப் பங்கேற்பு, தொழில் முறை ஆகிய நிலைகளில் ஆடப்பட்டுள்ளன. இவை அகக் கூத்துக்களாகவும் (காதல் நிகழ்வு) புறக்கூத்துக்களாகவும் அமைந்துள்ளன. சங்க கால மக்களின் வாழ்க்கையோடு தொடர்புப்பட்ட இக்கூத்துக்கள் நிகழ்த்தப்பட்ட நிலைகளை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றன. குரவைக்கூத்து என்பது தழூஉ ஆடல், குழு ஆடல், மகளிர் குழு ஆடல், நானில மக்களால் ஆடப்பட்ட ஆடல், வழிபாட்டு நிலையிலும், பொழுது போக்கிலும், தொழில் முறையிலும் ஆடப்பட்ட ஆடல் எனப் பல்வேறு வகைகளில் திகழ்கின்றன. இக்கூத்திற்கு கொளை என்ற பாடலும், தொண்டகச்சிறுபறையும் முழங்கப்பட்டன. புறக்காலத்தில் இக்கூத்து கும்மி ஆடலாக வளர்ச்சி பெற்றது. துணங்கைக் கூத்து சிங்கிக்கூத்து என்றும் குறிப்பிடப்படுகின்றது. மகளிர் துணங்கை, போர்த்துணங்கை, பேய்த்துணங்கை என்னும் மூவகை நிலைகளில் துணங்கைக்கூத்து அமைந்துள்ளது. இக்கூத்தில் வளை, தோல், பாதம் போன்ற உறுப்புகள்